179

வென்ணைநக்கீர் வைத்தியர்
வைத்தியம்.

179

ஸ்ரீ. வெள்ளியங்கிரி
வைத்தியர்
பீடம்பள்ளி போஸ்ட்.
கோயம்புத்தூர் மாவட்டம்

இவைகளின் பட்டையும், [illegible]

10. எடையும் ஆக்கி [illegible] ரக்

களையும் 13 ஆவது [illegible] கண்ட

சரக்குகளுடன் சேர்த்துக் [illegible] கொள்ளவும்.

~~மற்ற~~ மிகுதியுள்ளதை [illegible] பொடியாக்கி

இதன் பாதியுடன் சேர்த்து. ஒரு மண்

பாண்டத்தில் போட்டு, மறையும் வரை

யில் தண்ணீர் விட்டு, (சுமார் 48 லிட்டர்)

8 லிட்டராக வற்ற வைத்து ~~வடித்து~~

வேறு மட் பாண்டத்தில் எடுத்துக்

கொள்ளவும்.

3 வது பாதியில் சொல்லிய சாறு

வகைகளையும் இதனுடன் சேர்த்துக்

கொள்ளவும்.

4 வது பாதியில் கூறிய சரக்குகளின்

(+) இக்கின் தோல் மற்றவைகளையும்

இரண்டாவது பாதியில் கண்ட மரங்கள்,

செடியும் இவைகளின் பட்டையும்,

தேவதாருவையும் சேர்த்து இடித்துக்

கொள்ளவும். இவைகளை இன் ~~[illegible]~~

தயாரித்த ~~கஷாயச்~~ கஷாய சாறுவகை யுடன் சேர்த்து சேறுபக்குவமாகும் வரையில் அடுப்பேற்றிமேல் காய்ச்சவும்.
நல்லெண்ணெய் 8 லிட்டர் சேர்த்து எரிக்கவும். கல்கம், சிறிது உதிர்ந்து வரும் சமயம் நான்காவது பாரிலைக் கண்டக்கியைப் பொடி செய்து சேர்க்கவும்.
மெழுகு பதத்தில் இறக்கி பொங்கி அமரவைத்து வடிகட்டி பதிந்து கொள்ளவும்.

<u>உபயோகம்</u>:- ஜன்னிகள், இடைச்சல் வலி, எரிவு, கழுத்துப்பிடிப்பு, தோள், பிடிப்பு, இடுப்புவலி, இளம்பிள்ளைவாதம், பக்ஷவாதம், முகவாதம், கணுவாதம் (Rheumatism) திரிப்புவாதம், எரிவாதம், கைகால் நடுக்கம் (Chorea) முதலிய பல ரோகங்கள் குணமாகும்.
வாயாதி உள்ள பாகங்களில் தேய்த்துப் பிடித்து விடவும். தண்ணீர் விட்டு கழுவ வேண்டிய அவசியம் இல்லை. நோயாளி

குளித்துக் கொள்ளும் நிலையில் இருந்தால் மட்டும் தைலம் தடவிய மூன்று மணி நேரத்திற்குப் பிறகு வெந்நீரில் குளிக்கலாம்.

௨. பிரமமுட்டி தைலம்.

1) ஆயப்பட்டை பலம் 50, வில்வவேர் பலம் 25, பேராமுட்டி, சாரணை, நொச்சி வேர், உகான் வேர், கொடிவேலி வேர், மனைதாங்கி வேர், அமுக்கிரான் கிழங்கு, நாராயணன்சன்னி, சின்னி வேர், நிலப் பனங்கிழங்கு, நன்னாரி, வகைக்கு 16 ரூ. எடை. ~~திரிகை~~,

2) திரிகடுகு, திரிபலை, சித்தரத்தை, பேரரத்தை, வாய்விளங்கம், கருஞ்சீரகம், இந்துப்பு, அக்கிரகாரம், யானைத்திப்பிலி, வசம்பு, ஏலவரிசி, லவங்கப்பட்டை, செவ்வியம், மரமஞ்சள், கோஷ்டம், மதுரம், தேவதாரு-ம், கடுகு, காயம், உள்ளி, வெப்பாலை, வகைக்கு 4 ரூ. எடை.

வெள்ளாட்டுப் பால் 4 படி, எண்ணெய் 4 படி.

<u>செய்முறை:-</u> 1வது பாகங்களின் கண்டவற்றை [illegible] நறுக்கி 32 படி தண்ணீரில் போட்டு, ⅛ ஆக வற்றவைத்து, 2 வது பாகங்களை சேர்த்து

இவற்றை இடித்து ஆட்டுப்பால் சேர்த்து ஒன்றாகக் கரைத்து சேறு பக்குவமாக அண்டவைத்து, எண்ணெய் சேர்த்து மெழுகுபாகமாக வடித்துக்கொள்ளவும்.

<u>உபயோகம்</u>:- முன்சொன்ன வியாதிகள்,

3. பச்சை மூங்கில் குழித் தைலம்.

1) முற்றின மூங்கில் 4 அடி நீளம், செம்புளிச்சான் கட்டை ஒன்று, தேங்காய் தொட்டு 25.

2) ஓமம், காயம், இந்துப்பு, அக்கிரகாரம், குரோசாணி ஓமம், உள்ளி, கோஷ்டம்; 3 கி எடை.

<u>செய்முறை</u>:- மூங்கிலின் தப்பைகளைப் பிளந்து சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். செம்புளிச்சான் கட்டையை சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். தொட்டுகளை உடைத்துக் கொள்ளவும். இவைகளைப் பானையிலிட்டு மேல்சட்டி மூடி சீலை மண் வலுவாகச் செய்து காய வைக்கவும். மேல்சட்டி மையத்தில் சிறிய துவாரம் இடவும். இந்தப் பானை மறையும் அளவு குழிதோண்டி அதன் மையத்தில் சிறிது ஆழமாகத் தோண்டவும்.

பிறகு உள்ள மருந்துகளை இடித்து கலயத்தில் போட்டு குழியின் மத்தியில் வைத்து

மண் அணைத்து விடவும். பானையைத் தலை
கீழாக கலயத்தின் மீதே வைக்கவும். மேல்
சட்டியின் உள்ள துவாரம் கலயத்தின்
வாயினுள் இருக்கும் படி கவனிக்கவும்.
காட்டு எரு பானையைச் சுற்றி அடுக்கி
நெருப்பு வைக்கவும். 12 மணி நேரம் சென்று
சாம்பலை அகற்றி பானையை எடுத்துவிட்டு
கலயத்தை எடுக்கவும். அதில் உள்ள
தைலம் நீர் போன்று இருந்தால் அடுப்பில்
சுண்ட வைத்துக் கொள்ளவும்.

இளம் பிள்ளை வாதம் கண்டால்
குழந்தையின் கால்கள் சூடு இல்லாமல்
இருந்தால் இத்தைலத்தைப் பூசி
குழந்தையை சிறிது நேரம் இளம் வெய்
யிலில் வைக்கவும்.

இரண்டு மணி நேரத்தில் வெந்நீரில்
துண்டு வேட்டியை நனைத்து பிழிந்து ஒத்தடம்
செய்து தைலத்தைத் துடைத்துவிடவும்.

4 தேவதாரு சூடர் தைலம்.

1 தேவதாரம் 16 ~~பலம்~~ ரூ. எடை. க்கு
1/4 லிட்டர், தண்ணீர் விட்டு அரைத்து
இலுப்புத்துணி மீது தடவி காய வைக்கவும்.
தேவதாரத்தை இச்சிகளாகப் பரந்து
~~நன்கு~~ சின்தயாரித்த துணி மீது வைத்து
உருட்டு இரும்புக் கம்பியால் கட்டிக்கொள்
ளவும். இதை காட்டுக்கருணைக் கோல்
தெகிளை உள்ளதின் வைத்து திரமாகக்
கட்டவும். எருக்கலம் பூ காம்பு,
இத்து நீக்கி 1/2 லிட்டர் ஒரு சட்டியில்
போடவும். சூடம் 2 ரூ. எடை
தேங்காய் எண்ணெய் 2 படி அச்சட்டி
யால் எடுத்துக் கொள்ளவும். இந்த
சூடத்தை தேவதாரத்தின் மீது வைத்து
நெருப்புப் பற்ற வைக்கவும். நன்கு எரி
யும் போது எண்ணெயை அதன் மீது
ஊற்றவும். சொட்டுதைலம் இறங்கும்.
எருக்கிலம் பூ, நீர்வற்றிய பாகத்தில்
நெருப்பை அணைத்து விடவும்.

தைலத்தை வடித்துக்கொள்ளவும்.

<u>உபயோகம்</u>:- இடைச்சின் வலி. கிரைவகளுக்கு டேன் தேய்புக்கு உபயோகிக்கவும்.

7

5 நவரச மெழுகு. 4லிப்பாணி 520ல் உள்ளது..

பச்சை வாதத்தின் உபயோகம்.

அமுக்கிரான் கிழங்கு, சூரணம் செய்து, இளம்பிள்ளை வாதம் கண்ட குழந்தைகளுக்கு பாலில் கலந்து கொடுக்கவும்.

6. வகு தேங்காய்ப்பூ எண்ணெய்

சா.ரு 244.

தேங்காய் பால் படி 2. ~~சித்தாமணக்கு~~ சித்தாமணக்கு எண்ணெய் 1/2 படி. கருஞ்சீரகம், திப்பலி, வராகனிடை 2 1/2. சுண்டு பலம் 4. அத்தித்த வளம் பலம் 1/2. பாலில் அரைத்து காய்ச்சி வடித்து வயதிற்கேற்க படி 1/4 ~~[illegible]~~ 20 துளி ~~[illegible]~~ முதல் 40 துளி வரை கொடுக்கவும். குழந்தை~~[illegible]~~களின் மாந்த ஜன்னி நீங்கும்.

N. Dakshanamoorthi, 3. Khanniaman Mettu St.
Palakarai

லிங்கப்புற்று.

பூரம் 1 காசு } கண்டங்கத்திரி சாறு
மருங்கன் அரிசி }
துருசு — 1 1/4
வெள்ளைக் குங்கிலியம் }
பச்சை வெட்டை குங்கிலியம் 1 பலம் }
தேன்மெழுகு 1/8 } வெண்ணெய்
தேங்காய் }

அரையாப்பு கட்டி

சேங்கொட்டை பால் }
பஞ்சு }
கல்சுண்ணாம்பு பவுடர் — Dust } Dried
White of an egg }

Gauze — பருத்திக் கொட்டை
மஞ்சள் பொடி

C. Muruganathan
29/116 Vai yal St.,
Coimbatore

அபிராமசுந்தரி செந்தூரம்

கிளிமூக்கு கிழங்கு ½ வீ
இந்தில் உப்பு —
} காய்ச்சி

P. Kanjagiri mudaliar

Gunaraja Vaidyasalai
Kadayampettai
Edanganasalai P.O.
Salem Dist:

மேக வியாதிக்கு நாகமல்லி எண்ணெய்.

சரக்குகள்

விளக்கெண்ணெய்	படி	— ௨
பெரும் - நாகமல்லி சாறு	படி	— ௨
சோற்றுக் கற்றாழை	படி	— ௨
அமுக்கிராக் கிழங்கு	பலம்	— 1
ஜாதிபத்திரி	"	— 1
வெள்ள எலம்	"	— 1
நாகமல்லி வேர்	"	— 1
பூரம்	"	— 3/4
கந்தகம்	"	— 3/4
பிஞ்சுகடுக்காய்தூள்	பலம்	— 3/4

திருமூர்த்தி செந்தூரம் - காலரா

லிங்கம் பலம் — 1
வீரம் பலம் — 1
தாளகம் பலம் — 1

V.V. Sivagnanam

Siddha Physician,
Vadavalli P.O.
Coimbatore-7

சர்வ பித்தத்திற்கும் எண்ணெய்.

1) அதிமதுரம்
கோஷ்டம்
வெட்டிவேர்
கஸ்தூரி மஞ்சள்
பச்சிலை
பூலாங்கிழங்கு
லவங்கம்
சன்னலவங்கப்பட்டை
லவங்கப்பத்திரி
} வகைக்கு ௨ ரூ. எடை

தேங்காய் நெற்று — 25

சரக்குகளை உலர்த்தி இடித்து சலித்து தேங்காயை துருவி வெந்நீர் விட்டு பால் பிழிந்து மீண்டும் ஆட்டுக்கல்லில் விட்டு அரைத்து சாறு பிழிந்து கற்கமும் கலந்து அடுப்பிலேற்றி காய்ச்சி மெழுகு பதம் வந்ததும் வடித்து எடுத்து வைத்துக் கொள்ளவும்

காலையில் குளிர்ந்த நீரில் குளிக்கவைத்து நன்றாக
தலை காய்ந்த பிறகு 1/2 அவுன்ஸ் எண்ணெயை
நன்றாக தேய்த்து விடவும். நாள் தோறும்
இவ்வாறு செய்யலாம்.

2) <u>கண் கலிக்கம்.</u>

இருமிளகு — 1 பலம் எடுத்து இடித்து
துணியில் முடிகட்டி தும்பை இலைச்சாறு
விட்டு நன்றாக அரைத்து மாத்திரை திரட்டி
நிழலில் உலர்த்தவும். 4 - துளி குளிர் நீர்
விட்டு இழைத்து - (1- pill) இரண்டு கண்களில்
கலிக்கம் போடவும். வாரம் <u>இருமுறை தான்</u>
போடவும்.

3) <u>பித்த பைத்தியத்திற்கு பற்பம்</u>

நாய் மண்டை ஓடு
மனிதன் மண்டை ஓடு
மாட்டு மண்டை ஓடு

சுத்தி: நன்றாக உடைத்து தட்டாஞ்சட்டியில்

போட்டு எலுமிச்சம் பழச்சாறு நிறைய நிறைந்து
3-நாள் வெயிலில் வைத்து 4-ஆம் நாள் எடுத்து
நன்றாய் கழுவி, மீண்டும் சாமண் ஈ போட்டு தேய்த்து
தண்ணீரால் கழுவி வெயிலில் உலர்த்தி
மறுபடியும் எலுமிச்சம் பழ சாறு விட்டு அரைத்து
வில்லி தட்டி உலர்த்தி சில்லிட்டு சீலை
மண் செய்து காய்ந்த பின் குக்கிடப்புடமிடவும்.
பின் எடுத்து வில்லைகளை கழுதைப்பால் விட்டரைத்து
வில்லை செய்து உலர்த்தி ஆட்டிவிட்டு சீலமண்
செய்து முன்போலவே புடமிடவும். இவ்வாறு
செய்ய பற்பமாகும்.
அளவு: பெரு குன்றி எடை இருவேளை
(1 துட்டு எடை) கழுதைப்பல், (1 துட்டு
எடை) இஞ்சி சாறு இவற்றில் கலந்து தேன்
சர்க்கரை விட்டு கொடுக்கவும்

-.

பத்தியம்: டீ, புகையிலை, கடல் எண்ணெ.
கருவாடு, தின்ன, மாமிசம், மீன், கவோடு இவை
களை நீக்க வேண்டும்

4) ## நசியம்

பூச்சக்காய் ஒன்றை எடுத்து உள் விதையை
நீக்கி விட்டு மேற்றோல் கண்ணாடி டம்ளரில் போட்டு
இளிர்க்க நீரில் தண்ணீர் 1/4 அவுன்ஸ் விட்டு
15 நிமிடம் ஊறிய பின் துணியில் வடிகட்டி
~~6~~ சொட்டு மூக்கில் ஆறு ஆறு சொட்டு விடவும்
1/2 மணி கழித்ததும் நன்றாக உறங்கி விடுவார்கள்

அன்னபேதி டானிக்.

அன்ன பேதி — 3 தோ. எடை
அல்கா — 6 "

அன்னபேதியை 48 ஆ தண்ணீரில் நன்றாய்க் கரைத்து
7-முறை வடிகட்டி வைத்துக் கொள்ளவும். வெண்கலப் பாத்திரத்தில் அல்காவை
போட்டு தண்ணீரில்லாமல் தீயெரிக்கவும். நன்றாக
கொப்பு பதம் வரும் போது வடிகட்டின அன்னபேதித் தண்
ணீரை அதில் ஊற்றி 5 நிமிடம் அடுப்பில் வைத்து
இறக்கி வைத்துவிடவும். நன்றாய்க் கலக்கி வடிகட்டி
ஆறக்கலத்தில் கொள்ளவும்.

அளவு: காலை - 1 அவு
மாலை - 1 அவு

மாலையில் 1/4 படி பாலைக்காய்ச்சி சர்க்கரை

சேர்த்து சாப்பிடவும்

தீரும் நோய்கள் : காமாலை, பித்தக் காமாலை,

ஊதுகாமாலை , உடல்வீக்கம் :

குறிப்பு : கருவுற்றவர்களுக்கும் , மஞ்சள் காமாலை

உள்ளவர்களுக்கும் கொடுக்கலாகாது.

A. Nagarajan

Venkatachalapuram
(via) Thuraiyoor
Thiruchi

பஞ்சமுக வீரமாஸ்திரம்

வீரம்	பலம்	– 1/4	போதிய அளவு கருப்பு வெற்றிலை சாறு.
பூரம்	,,	– 1/4	
லிங்கம்	,,	– 1/4	
தாளகம்	,,	– 1/4	
வாலரசம்	,,	– 2	
நெல்லிக்காய் கந்தகம்	.....	1½	

மேற்படி கெந்தியில் ½ பலம் எடுத்து வெற்றிலச்சாற்றில் மைபோல் அரைத்து விளாங்காய் பருமனுள்ள மண்கலயம் எடுத்து அதன் உட்புறமெல்லாம் பூசி இதன்மேல் மூன்று முறைக்கும் பூசி காயவைத்து பின்பு மேற்கூறிய சரக்குகளை (இரசம் நீங்கலாக) உருவாக அரைத்து தூள் செய்து பாதியளவு தூளை கலயத்தில் வைத்து இரசம் நிற்குமளவு குழிசெய்து ரசத்தை அதிலிட்டு மீதிபாதி மருந்தையும் மேலேதூவி பின்பு வாலயோஜ முறை மேலும் கீழும் கலயம்

அசையாது கிலயத்திற்கு 7-சீலை மண் செய்து காயவைத்து ஒரு குண்டு சட்டியில் 1¼ படி சோற்றுப்பை மாவாக பொடி செய்து சட்டியிலிட்டு மருந்துள்ள கிரிய கலயத்தை அசையாமல் எடுத்து அதன் மத்தியில் வைத்து சுற்று அழுத்தி மேலும் 1¼ படி சோற்றுப்பை பொடித்து போட்டு பிடி கையினால் மெதுவாய் அழுத்தி மேல் சட்டி மூடி சந்துக்கு 7-சீலை மண் செய்து காயவைத்து அடுப்பேற்றி ஒரே ஜாதி விறகால் தீ எரிக்கவும்

எரிப்பின் அளவு:

௨ சாமம் தீபாக்கினி

2 " கமலாக்கினி

4 " தணலாக்கினி

ஆறிய பின் எடுத்து பார்க்க சரக்குகள் எல்லாம் புளிக் குண்டுக்கல் போலிருக்கும். அதைக் கல்வத்திலிட்டு 1 or 2 சாமம் வரையில் அரைக்க முருங்கைப்பூ நிறமான செந்தூரம். இதற்கு "திரி" செந்தூரம் என்றும் ஒரு பெயர்.

வேளையொன்றுக்கு 3 to 2 grains வீதம்

காலை, மாலை, 15 முதல் 20 நாள் வரை நெய்யில்
கலந்து உண்ண மேகம் - 21, சிற்சில குட்டம்
மேகப்படைகள், வாதம் 80 ம் தீரும்

தேனிற் கொள்ள சுரம் - 64 ஜன்னி - 13
திரிதோஷம், மார் நோய், சூலை - 18 - ம் கைகால்
பிடிப்பும் இன்னும் அனேக வியாதிகள் தீரும்.

பத்தியம் - இச்சாபத்தியம், வெள்ளாட்டுக்கறி,
பாலுடன் ~~[illegible]~~ இவைகள் விசேஷமாய்
சாப்பிட்டு வரலாம்

இதை சாப்பிட்டு வரும் போது தினமும் 20 or 40
முழுக்கு போட்டு ஸ்நானம் செய்ய வேண்டும்.
அப்படி செய நேரிடாவிடில் சுத்த நீரில்
குளிக்க வேண்டியது. குளிக்கும் போதெல்லாம்
உச்சியில் கொஞ்சம் நெய் தேய்த்துக்
கொள்ள வேண்டியது

குட்டம் முதலிய ரோகங்களுக்கு
ஒரு மண்டலம் சாப்பிட பூரண சுகத்தை
தரும். இடையில் 10 - 15 நாள் விட்டு
மீண்டும் ஒரு மண்டலம் குட்ட நோய்க்கு
கொடுக்க நலம் தரும்.

அண்டக்கல் வங்க பற்பம்

பிரண்டை சாற்றில் 11 - முறை சுத்தி செய்த கருவங்கம் - 1 பலம். அண்டக்கல் 1 பலம். இரண்டும் சமனெடை எடுத்து தூள்செய்து மண்பாண்டத்தில் ~~[illegible]~~ வங்கத்தை போட்டு அண்டக்கல் தூள் சிறுக சிறுக சேர்த்து வறுக்கவும். பின்னர் மேற்கூறிய சேர்க்கையை குப்பைமேனிச்சாறு விட்டு தேவையான அளவு சேர்த்து 1 — 2 சாமம் அரைக்கவும்.

அரைத்த வில்லையை மெலிவாகச் செய்து உலர்த்தி குப்பியில் வைத்து மேல் 7 சீலை செய்து 1/2 கஜபுடம் செய்யவும். ஆறிய பின் எடுத்து கல்வத்திலிட்டு அரைத்து வைத்து கொள்ளவும்.

தீரும் நோய்கள்: மேக நீர் சம்பந்தமான வியாதிகள், மேகப்படை, மேகச்சொறி, கைகால் வெடிப்பு, முடக்கு சூலை இவைகள் தீரும். வெள்ளை வெட்டை வியாதியில் கொடுக்கவும்.

அளவு: 3 குன்றி அளவு காலை, மாலை
3 நாள் விளக்கெண்ணெய், 3 நாள் வெண்ணெய்
~~3 முறை~~ 3 ~~நா~~ நாள் தேன்.

பவள பற்பம்.

பவளத்தை பசுவின் பாலில் ஊறப்போட்டு
மறுநாள் சுத்த ~~[illegible]~~ நீர் விட்டு கழுவி
கிழித்தும்பை சாற்றில் இந்த பவளத்தையும்
சின்னஞ்சிறு சட்டியில் வைத்து சீலை மண்
செய்து ½ கஜபுடம் (குழிக்கள் 1) போடவும்.
தேனில் கொள்ள காசம் தீரும்.
நெய்யில் கொள்ள மேக ரோகங்கள் தீரும்

வேறு.

பவளத்தை கல்வத்திலிட்டு கழிழ்தும்பை
சாற்றால் 1 - ஜாமமும் ½ சாமம் செந்தூர
செயநீராலும் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி
அகலில் வைத்து ~~[illegible]~~ மூடி சீலை
மண் செய்து காய்ந்த பின் குக்கிடப் புடமிட

பற்பமாகும்.

தீரும் நோய்கள் – க்ஷய ரோகங்கள், வயிற்றுப்புண், மற்றும் சில உள்உறுப்பு புண் புரைகளுக்கும் கொடுக்கலாம். துணைமருந்து: தேன், வெண்ணெய்.

பால் கருட கல் பற்பம்

2-பலம் கருடக்கல்லை 5 or 6 வரட்டியின் நடுவில் வைத்து புடமிட்டு வெந்த பின் சேதப்படாமல் எடுத்து கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் 2-சாமம் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி, – பின்பு பொ~~[illegible]~~டியாய அரைத்து பெரிய ~~[illegible]~~ நிராங்காய் பிரமாணம் கவசித்து 2-3 சீலை மண் செய்து 30-40 ~~[illegible]~~ வரட்டியில் புடமிடவும்.

நன்றாக ஆறவிட்டு ~~[illegible]~~.

எடுக்க பற்பமாகும்

பிரயோகம் : வேளைக்கு 1 கு. தினம் இருமுறை நெய் அல்லது வெண்ணெயில் கொள்ளவும்

தீரும் நோய் : கணைச்சூடு, நீர்ப்பையின் கொதிப்பு இவை தீரும்.

10 நாள் கொள்ள நோய் நீங்கும். 10 நாட்கள் விட்டு மீண்டும் 10 நாள் கொடுக்க சுக்கில விருத்தி உண்டாகும்.

தேகத்திடம் அறிந்து தினம் மூன்று வேளை கொடுக்கலாம்.

பத்தியம் : இச்சாபத்தியம்